RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21413

# இலங்கையில் சிறு தெய்வ வழிபாடு: இந்து, பௌத்த சமய மரபுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஒப்பியல் நோக்கு

வ. குணபாலசிங்கம் [அ, *]

[அ] இந்து நாகரிகத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

# Small Deity Worship in Sri Lanka: A Comparative Study Based on Hindu and Buddhist Religious Traditions

**V. Gunapalasingam** [a, *]

[a] Department of Hindu civilization, Eastern University, Sri Lanka

* Corresponding Author: gunapalasingamv@esn.ac.lk

Received: 15-08-2021
Revised: 08-09-2021
Accepted: 10-09-2021
Published: 15-09-2021

Check for updates

## ABSTRACT

The People who have not only multi ethnic, multi -religious and multi -languages in Sri Lanka but also, they follow different beliefs and cultural traditions as well. Hindu and Buddhist religious and cultural traditions are very prominent in Sri Lanka. Even though India is the root cause for the prevailing Hindu and Buddhist traditions in Sri Lanka, both the traditions and its worships and beliefs have unique and independent characteristics different from India. Small deity worship comprises of unique and independent characteristics in Sri Lanka. Small Deity worship in Hindu tradition: Kazhippu ritual, temple ritual, Kumara Deiva worship, Vairava worship, Pathini Amman worship, tree worship, Naga thampiran worship and small deity worship in Buddhist tradition: Thovil, Magapirith, katharagama deio, Bahirava, Pathini Deio, Bothi tree, Maga Naga are compared and identified unique and innovative characteristics among them. In this research, historical method, comparative method and descriptive method have been used. Data gathered from field work are considered as primary sources and data gathered from literature, research articles, manuscripts, etc. considered as secondary sources. Knowing origin and background of Hindu and Buddhist religion, identifying characteristics of small deity worship in Hindu and Buddhist tradition in Sri Lanka, discovering unique and innovative characteristics of small deity worship of Hindu and Buddhist traditions and evaluating values revealed by the two traditions are objectives of the research. Research area for this study is Magoya Divisional Secretary and Eravur Pattu Divisional Secretary. The conclusion of the research is that the small deity worships of the above two traditions fulfills psychological needs of the concerned people and small deity worship beliefs and traditions of Hindu and Buddhist religions will continue for long time.

**Keywords:** Sri Lanka, Hinduism, Buddhism, Small Deity worship

## முன்னுரை

இலங்கையில் இந்து - பௌத்த சமய சம்பிரதாயங்களைப் பேணும் மக்களிடையே வழக்கிலுள்ள வழிபாட்டுப் பாரம்பரியங்களில் சிறு தெய்வ வழிபாடு பிரசித்தமானது. இவ்வழிபாடு சமூக வரலாற்றுடனும், சூழலியல்சார் பண்பாடுகளுடனும் இறுகப்பிணைந்துள்ளது. இலங்கையில் புராதன பொருளாதார, சமூக அமைப்பு தொடர்ந்து நிலைபெறும் இடங்களில் இவ்வழிபாட்டின் செல்வாக்கினைக் காணமுடிகின்றமை மனங்கொள்ளத்தக்கது. குறிப்பாக இலங்கை வாழ் இந்து -பௌத்த சமய

மக்களிடையே வழக்கத்திலுள்ள இவ்வழிபாடுகளில் பல பொதுமைகளும் உண்டு தனித்துவங்களும் உண்டு. இரு சமய மக்களும் தொல் பழங்காலத்தில் அருகருகே பேத உணர்வின்றி கொண்டும், கொடுத்தும் வாழ்ந்து வந்தமையினாலும், இரு சமயங்களின் தோற்றங்களும் ஒரே பிரதேசத்தில் தோன்றியவை எனக் கருதப்படுவதனாலும் இத்தகைய பொதுமைகள் இருத்தல் இயல்பே, இருப்பினும் இரு சமய மரபுகளிலும் சில சம்பிரதாயங்கள் தனித்துவம் மிக்கவையாகவும் காணப்படுகின்றமை குறிப்பிடற்குரியது. எனவே இவ்விரு சமய மரபுகளிலும் காணத்தக்க சிறு தெய்வ வழிபாடுகளை ஒப்பு நோக்குவதன் மூலம் இவ்வழிபாட்டின் பொதுமைகள், தனித்துவங்களை அடையாளங்காண முடிகின்றமை இங்கு கவனத்திற் கொள்ளத்தக்கது.

இவ்வாய்வு வரலாற்றியல் ஆய்வு முறையியல், ஒப்பீட்டு ஆய்வு முறையியல், விபரண ஆய்வு முறையியல் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுக்கு கள ஆய்வு மூலம் பெறப்பட்ட தகவல்கள் முதன்மை மூலங்களாகவும், இலக்கியங்கள், ஆய்வுக்கட்டுரைகள், ஆய்வேடுகள் என்பன துணை மூலங்களாகவும் உபயோகிக்கப்பட்டுள்ளன.

இந்து - பௌத்த சமயங்களின் தோற்றப்பின்னணியினை அறிதல், இலங்கையில் இவ்விரு சமயங்களிலும் காணத்தக்க சிறு தெய்வ வழிபாட்டினை அடையாளப்படுத்துதல், இவ்விரு சமயங்களிலும் வழக்கிலுள்ள சிறுதெய்வ வழிபாட்டில் காணத்தக்க தனித்துவங்களையும் பொதுமைகளையும் இனங்காணுதல், இவ்விரு வழிபாட்டின் ஊடாக வெளிப்படும் விழுமியங்களை மதிப்பீடு செய்தல் என்பன இவ்வாய்வின் நோக்கங்களாகும். கிழக்கிலங்கையின் மகோயா பிரதேச செயலகப் பிரிவும், ஏறாவூர் பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுகளும் ஆய்வுக் களமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

## சிறு தெய்வம் என்னும் சொல்லாட்சி

இந்து - பௌத்த பாரம்பரியத்தில் சிறு தெய்வ வணக்கம் எனும் கருத்தியல் தொன்று தொட்டு பயிலப்பட்டு வந்திருக்கின்றது. 'சிறு தெய்வம்' என்ற சொல்லின் தோற்றத்தை நோக்குகையில், இச்சொல் முதன் முதலாக அப்பர் தேவாரத்தில்,

'சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்'(அ. தே 521)

என்று பயின்று வந்திருக்கின்றது. இதன் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும். சோழர் காலப் பகுதியில் வாழ்ந்தவரான சேந்தனார் தமது திருப்பல்லாண்டில்,

'சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்

சிறுநெறி சேராமே'(தி.ப.218)

என்று பாடியுள்ளார். இவ்விரு பாடலடிகளையும் ஒப்பு நோக்குகையில் சிறு தெய்வங்கள் அழிவுறும் தன்மையது எனவும், இத்தெய்வங்களை வணங்குகின்ற நெறி சிறு நெறி எனவும் பயிலப்பட்டு வந்திருக்கின்றது. 'சிறு தெய்வம்', 'சிறு நெறி' என்னும் சொற்பதங்களின் நேர்மாறான சொல்லாட்சி 'பெருந் தெய்வம்', 'பெரு நெறி' என்பனவாகும். சமூகத்தின் விளிம்பு நிலை மக்களால் வழிபடப்படுகின்ற தெய்வங்கள் 'சிறு தெய்வங்கள்' எனவும், மேல்தளத்து மக்களால் வழிபடப்படுகின்ற தெய்வங்கள் 'பெருந் தெய்வங்கள்' எனவும் குறிப்பிடும் வழமை அக்காலத்திலே இருந்திருப்பதாக அறியமுடிகின்றது. ஆய்வு நெறியிலும், தெய்வ வழிபாட்டு நோக்கிலும் 'சிறு தெய்வம்', 'பெருந்தெய்வம்' என்ற சொல்லாட்சியை தாழ்ந்தவை, உயர்ந்தவை என்ற பொருளில் எடுத்தாள முடியாது. இக்கட்டுரையில் 'சிறு தெய்வம்' என்ற சொல் நாம் பழகிவிட்ட சொல் என்பதனாலேயே எடுத்தாளப்படுகின்றது

## இலங்கையில் இந்து - பௌத்த சமய உருவாக்கம்

ஒரு இனக்குழுமத்தின் சமூக, பொருளாதார தளத்தை அடிப்படையாக வைத்துக் கொண்டே அவ் இனக்குழுமத்தின் சமயம் உருவாக்கம் பெறும். அந்தவகையில் இந்து சமயமானது நீண்ட ஒரு வரலாற்றுப் பாரம்பரியத்தையும், பரப்பையும் உடையது. இதில் வேதத்தின் வழிவந்த சமய நெறிகள்

மாத்திரமன்றி, இந்திய நாகரிகத்தின் அடித்தளமாக விளங்கிய ஆதிக்குடிகளின் வழிபாட்டு நெறிகளும் அடங்கும். இவ்வழிபாட்டு நெறிகள் இன்று வேதாகம வழிபாட்டைத் தழுவாத சிறு தெய்வ வழிபாட்டு நெறிகளாக இனங் காணப்பட்டுள்ளன. வேதாகம நெறிகளுக்கு உட்பட்ட வழிபாட்டு நெறிகளினதும், சிறு தெய்வ வழிபாட்டு நெறிகளினதும் சேர்க்கையே இன்றைய இந்து மதமாகும்.

புத்த பெருமானின் காலத்தில் சமண, வைதீக சமயங்களின் அனுஸ்டானமாக நோன்பிருத்தல் வழக்கிலிருந்தது. நோன்பிருந்து உடலை வருத்தி ஒரு பயனும் இல்லை என்பதை உணர்ந்த புத்த பெருமான், உலகியல் பற்றினைத் தூண்டும் வைதீக நெறிக்கும், உலகியலை கடுமையாக ஒறுக்கும் சமண நெறிக்கும் இடைப்பட்டதான நடுவழி ஒன்றைத் தேர்ந்தெடுத்து மனித குலம் முழுவதையும் நேசிக்கும் அன்பும் அருளும் பரிவுணர்வும் மிக்க நெறியை உபதேசித்தார். அந்நெறிதான் இன்றைய பௌத்த சமயம். பௌத்த சமயத்தில் கடவுள் கோட்பாடு இல்லை. என்றாலும் சாதாரண மக்களின் வழிபாடு சம்பந்தமான அபிலாசைகளை பூர்த்தி செய்ய முடியவில்லை. இதன் காரணமாக சாமானிய மக்கள் மத்தியில் நிலவிய சிறு தெய்வ வழிபாடுகளையும், பிற்காலத்தில் புத்தரையே கடவுளாக்கி விட்ட நிலையில் தாதுகோப வழிபாடுகளையும் வழக்கத்திற்குக் கொணர்ந்தனர். சிலப்பதிகாரத்தில் மானிடப் பெண்ணாகப் பிறந்து தெய்வ நிலைக்கு இட்டுச் செல்லப்பட்ட கண்ணகியைப் போன்றே புத்தரையும் இன்று பௌத்த மக்கள் கடவுள் நிலைக்கு இட்டுச் சென்று வழிபடுகின்றனர்.

ஆக, இலங்கையிலுள்ள இவ்விரு சமயங்களினதும் ஊற்று இந்தியா என்பது மனங்கொள்ளத்தக்கது. புராதன இலங்கையில் இந்திய வைதிக சமயம் அரச மதமாக மாறுகையில் சமய சம்பிரதாயங்களில் ஏலவே இங்கிருந்த சுதேசிகளின் சமய நடைமுறைகளும் வைதிக நெறியில் கலக்கலாயின. இலங்கையின் சமூக அமைப்பிற்கு ஏற்ப சமயமும் உருவாக்கப்பட்டது. பின்னாளில் பௌத்த சமய வருகையின் போது இங்கிருந்த இந்து சமய நடைமுறைகளையும் தன்னுள் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவையும் இருந்தது.

## இலங்கையின் இந்து - பௌத்த சமய மரபுகளில் சிறு தெய்வ வழிபாட்டின் தொன்மை

தமிழரின் மிகப்பழைய இலக்கியங்கள் சங்க இலக்கியங்களாகும். அவற்றில் பல்வேறு வழிபாட்டு அம்சங்களைக் காணமுடிகின்றது. சூலி, அணங்கு, சூர்மகள், சூரரமகளிர், வரையரமகளிர், கடல்கெழு செல்வி, கானமர் செல்வி, பாவை ஆகிய தெய்வங்கள் அங்கு வழிபடப்பட்டதுடன், நடுகல் வணக்கம், வேலன் வெறியாடல் முதலியனவும் இயற்றப்பட்டிருக்கின்றன. பௌத்த காப்பியமான மணிமேகலையில் தாரா தேவி, சம்பாபதி, மணிமேகலா, தீபதிலகை, கந்திற்பாவை, பூத வழிபாடுகள் முதலியன வழக்கிலிருந்ததாக அறியமுடிகின்றது. மணிமேகலை விழாவறை காதையில் இந்திர விழாவிற்கான பூர்வாங்க நிகழ்வுகளில் கோயில் வழிபாடுகளும் இடம்பெற்றிருக்கின்றன. இதனை பின்வரும் செய்யுளினூடாக அறியலாம்.

'நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலாப்

பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக,

வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை

ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்'(மணிமேகலை விழாவறை காதை 55 வரி)

அதாவது நெற்றிக் கண்ணால் பார்த்தலையுடைய தலைவனான சிவபெருமான் முதலாக, இந்நகருள்ளே வாழும் சதுக்கத்துத் தெய்வமான சதுக்கப்பூதம் ஈறாக உள்ள கோயில்களுள் எல்லாம் வெவ்வேறு சிறப்புக்களைக் கொண்டனவாகவும், வெவ்வேறு பட்டனவாகவும் செய்யும் வழிபாட்டுச் செயல்மரபினை எல்லாம் அந்தந்த மரபுகளின் வழிமுறைகளை அறிந்தோர், அம்மரபுகளின்படியே செய்வீர்களாக என கூறும் பாடலில் இரு வகையான வழிபாட்டு மரபுகள் வழக்கிலிருந்தமையினையும், அவ்வழிபாடுகள் மரபு தவறாமல் இயற்றப்பட்டிருக்கின்றன என்பதனையும் அறியமுடிகின்றது. இங்கு

சதுக்கத்துப் பூத வழிபாடு கவனத்திற்குரியது, சதுக்கத்துப் பூதம் வழிபாட்டில் யக்ஷ - நாக வழிபாட்டம்சங்கள் பல பொதிந்து காணப்படுகின்றன.

பண்டைய ஈழத்தில் பௌத்த சமய பரப்புகைக்கு முன்னர், யக்ஷ - நாக வழிபாடுகள் இங்கிருந்த பழங்குடி மக்களால் பேணப்பட்டிருக்கின்றன. இவ்வழிபாடுகள் ஆரம்பத்தில் வட இந்தியாவிலிருந்தும், தென்னிந்தியாவில் இருந்தும் ஈழத்திற்குள் புகுந்திருக்கலாம் என நம்பப்படுகின்றது. (Sittampalam,1996) இலங்கையில் யக்ஷ வழிபாடு இயற்கை சக்திகள் உறையும் இடங்களோடு தொடர்புபடுத்திக் கூறப்படுகின்றது. (Sittampalam,1996) இலங்கையின் இந்து - பௌத்த சமய மரபில் சிறு தெய்வ வழிபாட்டின் பிரசித்தத்தை யக்ஷ-நாக வழிபாடுகள் ஊடாக அறியக் கிடைக்கின்றது.

பௌத்த சமயம் இலங்கையில் பரவுவதற்கு முன்னர் இங்கு நிலவிய சமய நடைமுறைகள் தற்கால வழக்கிலுள்ள இந்து சமய சம்பிரதாயங்களைப் பிரதிபலிப்பனவாகும். சிங்கள மொழியைப் பேசுவோரின் மூதாதையரும், அவர்களின் சந்ததியினரும் பௌத்த சமயத்திற்கு மதம் மாறினாலும் கூடத் தொடர்ந்து இந்து சமய வழிபாட்டு நெறிகளையும் பேணி வந்துள்ளனர், வருகின்றனர். (Maunaguru,1992) இதனை சிறு தெய்வ வழிபாடாக சிங்கள மக்கள் மத்தியில் வழக்கிலிருக்கும் இந்து சமய மரபின் சிறு தெய்வ வழிபாட்டு நெறிகள் எடுத்துக் காட்டுகின்றன. சிங்கள மக்களில் பெரும்பாலானோர் பௌத்த சமயத்திற்கு மாறிய பின்னரும் தமது பழைய இந்து சமய நம்பிக்கைகளைப் பௌத்த சமயத்தினூடாகப் பேணும் வாய்ப்பினைப் பெற்றனர்.

இலங்கையில் காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இங்கிருந்த சுதேச மதங்களின் வழிபாடுகள் தடைப்படுத்தப்பட்டன. கிறிஸ்தவ வணக்கம் பரம்பலடையலாயின. அதனால் நாட்டில் நிலவிய தெய்வ வணக்கங்கள் மறைவிலேயே செய்யப்பட்டு வந்தன. யாழ்ப்பாணப் பகுதியில் அடுப்பு நாச்சியார் (Kanapathipillai,1996) என்ற தெய்வமும், கிழக்குப்பிராந்திய வைரவர் வழிபாட்டு மரபும், விரத நடைமுறைகளும் இதற்குத்தக்க சான்றுகளாகும்.

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டு கால இலங்கையில் ஆங்கிலேயர்களால் சிறு தெய்வ வழிபாடுகள் பரிகாசம் செய்யப்பட்டன. ஆறுமுகநாவலர் போன்ற சமய மறுமலர்ச்சியாளர்களால் இவ்வழிபாடுகள் பெரிதும் விரும்பப்பட்டதாக தெரியவில்லை. வட பகுதியில் நிலவிய சிறு தெய்வ வணக்க முறைகள் மாற்றத்திற்குள்ளாகின, பல மறைந்தும் போயின. ஆனால் சுவாமி விபுலானந்த அடிகள் இவ்வழிபாட்டில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவருடைய சமய பின்புலம் கண்ணகி வழிபாட்டுடன் தொடர்புடையது. இதனடியாக இன்றும் வலிமையான ஆகமம் சாராத பண்பாடொன்று கிழக்குப் பிராந்தியத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சங்களில் ஒன்றாகும்.

இலங்கையின் இந்து மக்கள் மத்தியில் பண்டைக்காலம் முதலாக கழிப்புச் சடங்கு, உருவேறி ஆடும் ஆட்டம், தெய்வ வழிபாடுகள் முதலியன வழக்கிலுள்ளன. இங்குள்ள பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் இதே தன்மையான வழிபாடுகள் இருந்தன. இன்றும் சில வழக்கிலுள்ளன. அவை தொவில், மஹாபிரித், கோகம்பங்கரிய, சன்னியக்கும, ரட்டயக்கும, கரயக்கும என்பனவும் பிறவுமாகும். (Mudhiyansalage,2020)

இலங்கையில் இந்துக்களும், பௌத்தர்களும் ஒருங்கே வாழும் பிரதேசங்களில் கிழக்கிலங்கை பிரத்தியேகமான ஒரு பிரதேசமாகும். இங்குள்ள மக்களால் இயற்றப்படுகின்ற சிறு தெய்வ வழிபாடுகளும் ஒன்றிலிருந்து ஒன்று எடுத்தும் கொடுத்தும் வளர்ச்சி அடைந்து வந்திருக்கின்றன. இவைகளை ஒப்பிட்டு அணுகுவதன் மூலம் இவ்விரு சமயங்களிலும் சிறு தெய்வ வழிபாட்டுப் பாரம்பரியங்களின் ஒருமித்த தன்மையினை உணரமுடிகின்றது.

## கழிப்புச் சடங்கு - தொவில்

தமக்கும், தம்மைச் சார்ந்தோருக்கும் ஏற்படும் சில நோய்கள், துன்பங்களுக்கு சில துட்ட தெய்வங்களே காரணம் என மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். இத்துட்ட தெய்வங்களை கலைப்பதற்காகச் செய்யப்படும் சடங்குகளே கழிப்புச் சடங்குகள் ஆகும். இச்சடங்குகளை வீடுகளிலும், நாலாம் சந்திகளிலும், நீர் நிலைகளிலும், சுடுகாட்டிலும், ஒதுக்குப்புறமான வேறு சில இடங்களிலும்

செய்வதுண்டு. நோய் தரும் துட்ட தெய்வங்களாக காடேறி, கரையாக்கன். ஊத்தக்குடியன், புள்ளிக்காரன், சுடைலைமாடன் முதலியன கொள்ளத்தக்கன. இத்துட்ட தெய்வங்களை ஓட்டக்கூடியவை நல்ல தெய்வங்களே என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் நிலவுகின்றமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். அந்நல்ல தெய்வங்களாவன காளியம்மன், மாரியம்மன், வைரவர் முதலியனவாகும்.

நோயினால் பாதிக்கப்பட்டவர் சன நடமாட்டம் இல்லாத ஒதுக்குப்புறமான ஓர் இடத்திற்கு அழைத்து வரப்படுவார். அவருக்கு முன் கும்பம், மடை என்பன வைப்பர். நோயினால் பாதிக்கப்பட்டவர் எந்த துட்ட தெய்வத்தினால் பாதிக்கப்பட்டுள்ளாரோ அதற்குப் பிடித்தமான பொருட்களைக் கொண்டே மடை வைப்பர். எடுத்துக்காட்டாக கரையாக்கன் எனும் துட்ட தெய்வத்தினால் பாதிக்கப்பட்டிருந்தால் மீன், கருவாடு, கரையாக்கன் பூ, கரையாக்கன் தடி, சீப்பு, கண்ணாடி, காப்பு முதலிய பொருட்களை மடையில் வைப்பர். பூசாரி துட்ட தெய்வங்களுக்கான பாடல்களை உடுக்கடித்துப்பாடுவர். நோயாளியில் துட்ட தெய்வம் வந்திறங்கும். துட்ட தெய்வத்தை கலைப்பதற்கு நல்ல தெய்வம் வரவழைக்கப்படும். நல்ல தெய்வம் ஏறப்பெற்றாடுபவர் கையில் சாட்டைக்கயிறு இருக்கும். நோயாளியில் பிடித்திருக்கும் துட்ட தெய்வத்தை விரட்டுவதற்குச் சாட்டைக்கயிறினால் சாட்டை கொடுக்கப்படும். நோயாளியில் குடிகொண்டிருந்த துட்ட தெய்வம் கலைந்து போகும். பின்னர் துட்ட தெய்வத்தை கலைத்த நல்ல தெய்வத்திற்கு வீட்டில் பூசை வழிபாடுகள் செய்து அத்தெய்வத்தினை திருப்திப்படுத்தி, அடுத்த வருடமும் குறித்த காலப்பகுதியில் பள்ளயம் (படையல் பொருள்) தரப்படும் எனக்கூறி தெய்வத்தை மலையேறச் செய்வர் (Nallathambi,2020)

இலங்கைச் சிங்கள மக்களிடையே பௌத்த மதம் இலங்கைக்கு வருமுன்னரே சிறு தெய்வ வழிபாடுகள் இருந்துள்ளன. சக்தி வாய்ந்த ஆவிகளை இவர்கள் வணங்கினார்கள். பௌத்த மதம் பரவிய பின்னரும் அவ்வணக்கம் சிங்கள மக்கள் மத்தியில் மறையவில்லை. தமக்கு உண்டாகும் சில கொடிய நோய்களுக்கு துர்குணம் படைத்த துட்ட தெய்வங்களே காரணம் என சிங்கள பௌத்த மக்கள் நம்புகின்றனர். குறித்த வருத்தங்களுக்குக் காரணமான இத்தெய்வங்களை வசிய மந்திரங்களால் விரட்டுவதன் மூலம் இந்நோய்களை குணமாக்கலாம் என்ற நம்பிக்கை இன்றுமுள்ளது. நோய் தரும் துட்ட தெய்வங்களாக றிரியக்க, மகாகோல, சன்னியக்க, ஒட்டிக்குமார, சீனியம்யக்க, மகா சோகோன் யக்ஷய, கலுகுமார யக்க, றட்டயக்க, தெவில் யக்க, பிரேயதா, அசுரா போன்றன உள்ளன. இத்தகைய துட்ட தெய்வங்களை விரட்டுவதற்கு சில நல்ல தெய்வங்களும் உள்ளன. அவை காளியம்மா, பத்தினி தெய்யோ, பகிரவா, செங்கடகலத் தெய்யோ, கதரகமத் தெய்யோ முதலியனவாகும். (Mudhiyansalage,2020)

நோயினால் பாதிக்கப்பட்டவரில் இத்தகைய தெய்வங்களை வரவழைத்து, அத்தெய்வங்களுடன் உரையாடி அவைகளுக்கு விரும்பிய சாப்பாடுகளைக் கொடுத்து திருப்திப்படுத்துவதன் மூலம் அவைகளை நோயாளியில் இருந்து விரட்டலாம். இதற்காக செய்யப்படும் சடங்கே தொவில் ஆகும். இச்சடங்கில் பூசாரியின் வகிபாகம் பிரதானமானது. வெசமுனி எனும் தெய்வத்தின் உதவியுடன் துட்ட தெய்வங்களை விரட்டுவர். இத்தெய்வங்ளை விரட்டுவதற்கு செய்யப்படும் தொவில் சடங்கானது நாடகப் பாங்கில் நடைபெறுவது ஈண்டு நோக்கத்தக்கதாகும். (Mudhiyansalage,2020)

## கோயிற் சடங்கு - மகாபிரித்

இலங்கையின் கிழக்குப்பிராந்தியம் சிறு தெய்வ வழிபாட்டுக்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். இங்குள்ள தமிழ் மக்கள் சிறு தெய்வங்களுக்கு இயற்றப்படும் வழிபாடுகளை சடங்கு என அழைப்பது மரபு. இத்தெய்வங்களுக்குச் சிறியனவும், பெரியனவுமாக பல கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில் வருடத்திற்கு ஒரு முறை சடங்கு நடைபெறும். சடங்கின் இறுதி நாள் பெரும் விழாவாக அமையும்.

அன்றைய தினம் அனுமன், காத்தவராயன், நாககன்னி, குத்துக்கிழவி, வதனமார் முதலிய தெய்வங்களுக்கும் இன்னும் பிற தெய்வங்களுக்கும் அபிநயித்து ஆடுபவர்கள் தங்களை இத்தெய்வங்களாகவே பாவனை செய்வர். (Maunaguru,1998) உதாரணமாக அனுமானுக்கு ஆடுபவர் கைகளைக் குரண்டிக்கொண்டு தலையை எந்நேரமும் சொறிந்து கொண்டே இருப்பார். குத்துக் கிழவிக்கு ஆடுபவர் தடி ஒன்றை ஊன்றிக் கொண்டு வாயில் வெற்றிலை மென்று கொண்டு வயது முதிர்ந்த

மூதாட்டி பாவனையில் வருவார். இவை போன்றே ஏனைய தெய்வங்களும். இவை போன்றே சிங்கள மக்கள் மத்தியிலும் மகா பிரித் சடங்கு காணப்படுகின்றது.

தொவிலுக்கு அடுத்ததாக சிங்கள மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள சடங்குகளில் மகாபிரித் சடங்கு குறிப்பிடத்தக்கது. மகாபிரித் சடங்கு நடைபெற்று ஏழாம் நாள் சடங்கு தொரகத ஆசன என்றழைக்கப்படுகின்றது. இதில் விகாரையை அண்மித்துள்ள சகல தேவாலயங்களிலுமுள்ள தெய்வங்களை அங்கு வரும்படி அதனை நடத்தும் பிக்கு வேண்டுவார். இதில் புத்தரின் ஜாதகக்கதைகள் நிகழ்த்திக்காட்டப்படும். உதாரணமாக அலவ் எனும் மன்னன் வேட்டையாடச் சென்ற போது அலவக என்ற பேயினால் பிடிபடுகின்றான். அலவ் தான் தப்பித்துக் கொள்வதற்காக தனது மகனை பேய்க்குத் தருவதாக வாக்குக் கொடுக்கின்றான். புத்தரின் தலையீட்டினால் அலவ்வின் மகன் தப்பித்துக் கொள்கின்றான். அலவக என்ற பேய் புத்தரின் உபதேசம் கேட்டு புத்த மதம் மாறுவதாக இக்கதை நிகழ்த்திக்காட்டப்படுகின்றது. (Maunaguru,1998) இவை போன்று இன்னும் பல கதைகள் உண்டு என்பது மனங்கொள்ளத்தக்கது.

## குமார தெய்வம் - கத்தரகம தெய்யோ

கிழக்கிலங்கையில் வழக்கிலுள்ள சிறு தெய்வ வழிபாடுகளுள் குமார தெய்வ வழிபாடு பிரத்தியேகமானது. இவ்வழிபாடு இனக்குழு வழிபாட்டின் ஒரு அடையாளம். கிழக்கிலங்கையில் வாழும் வேடுவர் வழிவந்த மக்கள் கூட்டத்தினரால் இவ்வழிபாடு இயற்றப்படுகின்றது.

கிழக்கிலங்கையில் இன்று வளர்ச்சி அடைந்த நிலையிலுள்ள முருக வழிபாட்டின் ஆரம்ப நிலையாகக் கூட இவ்வழிபாட்டைக் கணிக்க முடிகின்றது. பல்வேறு வகையான சம்பிரதாயங்களுடன் இச்சடங்கு நடைபெறும். பால் பொங்கி பானையில் அரிசியிட்டு பொங்கற் பானை ஏற்றுதலுடன் சடங்கு நிறைவு பெறும். தானிய விருத்தி, கால்நடை விருத்தி, குல விருத்தி முதலியவைகளை வேண்டி இச்சடங்கு நிகழ்த்தப்படுகின்றது. மொத்தத்தில் இதனை ஒரு வளச்சடங்காகக் கொள்ளலாம். குமார தெய்வத்தின் ஆளுகைக்கு உட்பட்ட தெய்வங்களாக கொழும்புக் குமாரர், கண்டிக் குமாரர், காலிக் குமாரர் முதலிய தெய்வங்களைக் குறிப்பிடலாம். (Gunapalasingam, 2020)

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள சிறு தெய்வ வழிபாடுகளில் கதரகம தெய்யோ வழிபாடு பிரசித்தமானது. கல்வி, இழந்த சொத்துக்களை மீளப் பெறல், மனோபலத்தை அதிகரித்தல், எதிரிகளை வெல்லுதற்கான துணிவை விருத்தி செய்தல், அதிஸ்டங்களை பெறுவதற்கு வழிகாட்டுதல், ஆளுமையை விருத்தி செய்தல் முதலியவைகளுக்காக பௌத்த மத மக்கள் இத்தெய்வத்தை வணங்குகின்றனர். இத்தெய்வம் ஸ்கந்த குமார தெய்யோ எனவும் அழைக்கப்படுகின்றது. இக்கடவுள் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வந்த கடவுளாக நம்பப்படுகின்றது. இவரது துணைவியராக வள்ளியம்மா, தெவியம்மா என்னும் இரு பெண் தெய்வங்கள் காணப்படுகின்றனர். கத்தரகம தெய்யோவின் ஆளுகைக்கு உட்பட்ட தெய்வங்களாக கடவற தெய்யோ, சித்த சூனிய தெய்யோ, கம்பர தெய்யோ ஆகிய தெய்வங்களைக் குறிப்பிடலாம். (Gunapalasingam, 2020) ஆக மேற்குறித்த இரு தெய்வ வழிபாடுகளும் இலங்கையில் இயற்றப்படுகின்ற முருக வழிபாட்டின் சாயலை ஒத்தவையாகக் காணப்படுகின்றமை கவனத்திற்குரியது

## வைரவர் - பகிரவா

இந்து சமயத்தில் காவல் தெய்வங்களை வழிபடுகின்ற மரபு தொன்று தொட்டு வழக்கிலிருந்து வந்திருக்கின்றது. கிழக்கிலங்கையில் வைரவர் வழிபாடு வீடுகளையும், கோயில்களையும் மையப்படுத்தி இயற்றப்படுகின்றன. தமக்கும், தாம் வாழும் மனைக்கும் எவ்வித தீங்கும் நிகழக்கூடாது என்ற நப்பிக்கை காரணமாக வீடுகளில் வைரவருக்கு பந்தல் அமைத்து, மடை பரவி வழிபாடு இயற்றுவர். கஞ்சா ரொட்டி, கள்ளு, சாராயம், பழம், பலாப்பழம், துள்ளுமா, பாணக்கம் முதலிய படையல் பொருட்களை வைத்து வைரவரை வழிபடுவர்.

சிங்கள மக்கள் மத்தியில் வழக்கிலுள்ள சிறு தெய்வ வழிபாடுகளில் பகிரவா வழிபாடும் ஒன்று. சிங்கள மக்களின் காவற் தெய்வங்களில் பகிரவா தெய்வமும் ஒன்று. இத்தெய்வத்துக்குரிய இடத்தினை மனிதன் ஆக்கிரமிக்க எத்தனிக்கும் போது அது மனிதனை தொல்லைப்படுத்துவதாக நம்பப்படுகின்றது. இத் தெய்வத்திற்குரிய பூசை வழிபாடுகளைச் செய்து அனுமதி கேட்கும் பட்சத்தில் அத் தெய்வம் அனுமதி வழங்குவதாக கூறப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு பூசை செய்வதற்கு மூன்று வெள்ளைத் தாமரைப் பூவும், பழ வகைகளும் போதுமானவை ஆகும். (Gunapalasingam, 2020)

## பத்தினியம்மன் - பத்தினி தெய்யோ

கண்ணகி வழிபாடு பண்டைய தமிழகத்தையும் ஈழத்தையும் இணைக்கும் வழிபாடு மட்டுமன்றித் தமிழ்-சிங்கள கலாசாரங்களின் ஒன்று சேர்க்கையும் ஆகும். இலங்கைக்கு கஜபாகு மன்னனால் கொண்டு வரப்பட்டதாக கொள்ளப்படும் கண்ணகி வழிபாடு பற்றிய எண்ணக்கருவை அடிப்படையாக வைத்துக் கொண்டு, கிழக்கிலங்கை வாழ் வேடுவ இன மக்கள் பத்தினியம்மன் எனவும், சிங்கள மக்கள் பத்தினி தெய்யோ எனவும் வணங்குகின்றனர்.

இந்து மதம்சார் பத்தினியம்மன் வழிபாடு கிழக்கிலங்கையின் கண்ணகையம்மன் வழிபாட்டில் இருந்து வேறுபட்டது. வழிபாட்டு முறையிலும், பரிகலத்தெய்வங்களிலும் நியாயமான வேறுபாடுகள் உண்டு. பத்தினியம்மன் வழிபாடு உத்தியாக்கள் (இறந்த தமது உறவுகள்) வழிபாட்டுடன் நெருக்கமான தொடர்புடையது. இவ்வழிபாட்டை நெறிப்படுத்தும் பூசகரே தெய்வம் ஏறப்பெற்று ஆடுவார். ஆடும் போது தமது சுற்றங்களை அழைத்து வேடுவர்களுக்கு உரித்தான தமிழ் அல்லாத வேற்றுமொழியில் உரையாடுவர். இதன்போது பத்தினி அம்மனின் துணைத் தெய்வங்களான குருணாகல தெவுத்தன், கல்லல தெவுத்தன், திம்புலாகல தெவுத்தன், செம்பகவன்னியன் முதலியன தெய்வங்கள் வரவழைக்கப்பட்டு வழிபாடுகள் இடம்பெறுகின்றன. (Gunaplasingam,2008)

இலங்கையின் பௌத்த சமய சிறுதெய்வங்களில் பத்தினித் தெய்யோ வழிபாடு முதன்மையானது. பத்தினி தெய்யோ நாட்டைக்காக்கும் காவல் தெய்வங்களில் ஒன்றாக வழிபடப்படுகின்றது. இவ்வாறு நாற்றிசைத் தெய்வமாக ஒரு பெண் தெய்வம் சிங்கள மக்களால் போற்றப்படுகின்றமையானது, இச்சமுதாயத்தில் நிலைத்திருந்த தாய்த் தெய்வ வழிபாட்டின் பழமையையும், தொடர்ச்சியையும் அறியக்கிடைக்கின்றது. கண்டி பெரஹராவிலும் பத்தினி தெய்யோவிற்கு பிரதான இடம் வழங்கப்படுகின்றது

## மரவழிபாடு - போதி மரம்

இயற்கைச் சக்திகளை தெய்வம் உறையும் இடங்களாக கருதி வழிபட்ட மரபோடு இணைந்ததுதான் மரவழிபாடாகும். மரங்கள், தாவரங்களோடு பண்டைய மனிதன் கொண்டிருந்த தொடர்பும் நெருங்கிய ஈடுபாடுமே இத்தகைய வழிபாட்டுக்குக் காரணமாகும். மரங்கள், தாவரங்கள் மருத்துவக் குணம் உடையனவாகவும், புனிதப் பொருள் அந்தஸ்துப் பெற்றமையினாலும் மரவழிபாடு இந்து- பௌத்த சமயங்களில் இன்றியமையாதனவாகக் காணப்படுகின்றன. பழந்தமிழ் இலக்கியங்களில் கொற்றவை கானமர்ச் செல்வி எனவும், காடுகிழால் எனவும் வணங்கப்பட்டுள்ளாள். இந்துமத மரபில் ஆலமரம், வேப்பமரம், துளசிச் செடி முதலிய தாவர இனங்கள் புனிதமானவையாக கருதத்தக்கன. கிழக்கிலங்கை அம்மன் சடங்குளில் கல்யாணக்கால் வெட்டுதல் எனும் நிகழ்வு பிரதானமானது. கல்யாணக்கால் மரங்கள் புனிதத் தன்மை உடையனவாகக் கருதப்படுகின்றன. மேலும் பொருட்கள் களவாடப்படும் சந்தர்ப்பங்களில் மரங்களை சாட்சியாகக் கொண்டு நேர்த்தி வைக்கப்படும். பத்தினியம்மன் வழிபாட்டில் நீலித் தெய்வம் உறையும் இடம் வேம்பு ஆகும். ஆக, பண்டைகால மரவழிபாட்டின் எச்சசொச்சங்களை இன்றைய சிறு தெய்வ வழிபாடுகளில் காணக்கூடியனவாக உள்ளன.

இலங்கையின் பௌத்த மத மரபுகளிலும் மரவழிபாட்டுச் சம்பிரதாயம் உண்டு. மகா வம்சத்தில் நேரடியாக வழிபாட்டுக்குரிய மரங்களாக ஆலும் பனையும் குறித்துக் காட்டப்படுகின்றன. பண்டுகாபய மன்னன் காலத்திற்குரிய நிகழ்ச்சிகளுடன் பனை, ஆல் ஆகியனவும் வழிபாட்டுக்குரிய சின்னங்களாக

மகாவம்சம் கூறுகின்றது. இம்மன்னன் நகரத்தின் மேற்கு வாசற்ப்புறத்தில் வியாததேவன் எனும் தெய்வத்தை பனை மரத்தின் கீழும், வைஸ்ரவண என்ற தெய்வத்தை ஆலமரத்தின் கீழும் உறைய வைத்தான் என்ற குறிப்பு காணப்படுகின்றது. (Sittampalam,1996) பௌத்த மரபில் வனங்களும் வழிபாட்டுக்குரிய புனித இடங்களாக விளங்கியிருக்கின்றன. மகாவம்சத்தில் மகாமேகவனம், ஜோதிவனம் ஆகிய வனங்கள் பௌத்த மதத்தின் வருகையோடு குறிக்கப்படுகின்றன. இருப்பினும் பௌத்தம் இங்கு வருமுன்னர் இவ்வனங்கள் யக்ஷ வழிபாட்டிற்குரிய தெய்வம் உறையும் இடமாகக் கூட இருந்திருக்கலாம் என நம்பமுடிகின்றது. பண்டுதொட்டு பௌத்த சம்பிரதாயத்தில் போதி மரங்கள் வழிபாட்டுக்குரிய புனித சின்னங்களாக மாத்திரம் அன்றி மத அடையாளமாகவும் கருதப்படுகின்றன.

## நாகதம்பிரான் - மகாநாகா

நாகதம்பிரான் வழிபாடு திராவிட மக்களின் புராதன வழிபாடுகளிலொன்று. இவ்வண்ணம் இலங்கையிலும் காணப்படுகின்றது. இலங்கையின் வடக்கு- கிழக்கு பிராந்தியங்களில் நாகதம்பிரான் வழிபாடு சிறப்பு நிலையிலுள்ளது. கிழக்கில் விவசாயம் செய்யும் மக்களுடன் நாகதம்பிரான் வழிபாடு இரண்டறக்கலந்துள்ளது. வயல் விதைப்பின் போது நாகதம்பிரானுக்கு அறுவடை முடியும் வரை விச ஜந்துக்களால் எவ்வித தீங்கும் நிகழக்கூடாது என நேர்த்தி வைப்பர். அறுவடை முடிந்ததும் நாகதம்பிரானுக்குரிய நேர்த்திக்கடன் நிறைவேற்றப்படும். நேர்த்திக்கடன் நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அறுவடை முடிந்து தானியங்களை வீட்டுக்குக் கொண்டுவர முன்னர் பாம்புகள் வீடு தேடி வரும் என்ற அச்சமும் அப்பிராந்திய மக்களிடையே இன்றும் காணப்படுகின்றமை ஈண்டு நோக்கத்தக்கதாகும். கிழக்கில் மட்டக்களப்பு பண்டாரியாவெளி நாககட்டு கோயில் பிரசித்தமானது.

தனித்துவமான இவ்வழிபாட்டை பௌத்த மதமும் தமது சமய சம்பிரதாயங்களுடன் இணைத்துக் கொண்டது. பௌத்த ஜாதகக் கதைகளிலும், பாளி நூல்களிலும் நாக வழிபாடு பற்றிய தொன்மையை காணமுடிகின்றது. சூளவம்சத்தில் மகாநாகா வழிபாடு பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. பண்டைக்கால மன்னர்கள் நாகத்தினை நீரினைப் பாதுகாக்கும் தெய்வமாகவும், அரசைப் பாதுகாக்கும் தெய்வமாகவும் கருதி வழிபாடாற்றி இருக்கிறார்கள். குளங்களைக் கட்டி குளத்தின் நீர்மட்டம் குறையாமல் இருக்க காவற்கல்லில் நாகத்தினைப் பொறித்து வைத்து வழிபட்டிருக்கின்றார்கள். பௌத்தர்களின் நாக வழிபாட்டுத்தலங்களாக வெல்லமடவிலுள்ள நாகர் கோயில், களனியிலுள்ள நாகர் கோயில் என்பன சிறப்பானவை

## பிற தெய்வங்கள்

இலங்கையின் இந்து- பௌத்த சமய மரபுகளில் மேற்சொன்ன தெய்வ வழிபாடுகளை விட இன்னும் பல வழிபாடுகள் வழக்கிலுள்ளன. இத்தெய்வங்கள் முதலில் தீயவை விளைய காரணமாக அமைந்துவிடுகின்றன. பின்னர் அவைகளுக்குரிய சரியான வழிபாடுகளை இயற்றும் பட்சத்தில் அவை சாந்தமடைவதாக நம்புகின்றனர். சுடலை வைரவன், சுடலை காளி, காடேறி, உதிரமா காளி முதலிய சிறு தெய்வங்கள் இத்தகைய இயல்புடையன.

பௌத்த மரபில் அசுரா, பிரேயதா, டடிமுண்டா, கடவற, கண்டே பண்டார, சப்புமல் பண்டார. பிச்சமல் பண்டார, கம்பரா, கிரகா, வீர முண்டா முதலிய தெய்வங்கள் மேற்குறிப்பிட்ட வகைக்கு உரியவையாகும்.

## முடிவுரை

இலங்கையில் வைதிகநெறி தழுவிய இந்து சமயமும், பௌத்த சமயமும் அறிமுகமாக முன்னர் இங்கு வாழ்ந்த சுதேச மக்களின் வழிபாடுகள் சிறு தெய்வ வழிபாட்டு வகைமைக்குள் அடங்கியிருந்தன. காலப்போக்கில் இந்து சமயமும், பௌத்தமும் இவ்வழிபாட்டம்சங்களை தம்முள் இணைத்துக்கொண்டன. குறிப்பாக பிரசார மதமாக காணப்பட்ட பௌத்தம் புத்தபகவானை ஆதாரமாகக் கொண்டாலும்,

இவ்வழிபாடுகளை உள்வாங்க வேண்டிய தேவை அதிகமாக இருந்தது. சாதாரண இயல்பூக்க வாழ்கையில் நாட்டமுள்ள மக்களை திருப்திபடுத்துவதற்கு அவர்களிடம் வேறு மார்க்கம் இருக்கவில்லை என்பதை யாரும் மறுக்க முடியாது. இவ்வழிபாடுகள் மக்களின் உளவியல் தேவைகளை நிறைவு செய்கின்றன என்பதும், இவை மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைச் செலுத்துகின்றமையும், ஆய்வின் வாயிலாகப் புலப்பட்டது. இவ்வழிபாடுகள் நீண்ட காலம் நிலைக்கும் என்பது ஆய்வு முடிவாகும். இன்றைய இந்துப் பண்பாடு வைதிக மரபினடியாக வந்த கிரியை முறைகளையும், சாதாரண மக்களால் வணங்கப்பெற்று வந்த சிறு தெய்வ மரபுகளையும் இணைத்துக் கொண்டு வளர்ச்சியடைந்து வந்தது என்னும் பொதுவான உண்மையை நம்மில் பலர் ஏற்றுக் கொள்வதில்லை. எது எவ்வாறு இருந்தாலும் இலங்கையில் இந்து - பௌத்த சமய பண்பாடுகளின் முழுமையில் பிரிக்க முடியாத பகுதியாக சிறு தெய்வ வழிபாடுகள் விளங்குகின்றன.

## References


Gunapalasingam, V., (2008) Pro Agama based Sakthi Cult and Non-Agama based Sakthi Cult in Batticaloa District. A Comparative Study, Unpublished M.Phil. Degree research thesis submitted to University of Jaffna, Jaffna, Sri Lanka.

Gunapalasingam, V., Research observation 11.06.2020 Mangalagama, Gemunupura, Sri Lanka

Kanapathipillai, K., (1996) Eelathu Valvum and valamum (Sri Lankan Life and Prosperity), Kumaran puthaga Nilayam, Chennai, India.

Maunaguru, S., (1992) Drama and Theatre, Old and New, Batticaloa, Sri Lanka

Maunaguru, S., (1998) Traditional Drama of Batticaloa, Chennai, India.

Muthiyan Salake Kalubanda, Age 63, Mangalagama, Gemunupura – 5.09.2020, Sri Lanka.

N. Sellathamby, age 60, Aarumugathan Kudiyiruppu - 10.09.2020, Sri Lanka.

Puliyur Kesikan, (2017) Manimekalai with clear commentary, Paari Nilaiyam, Chennai, India.

Senthanaar, (1998) Thiruppalandu (Saiva Thirumurai Thiratu), Varthamaanan Pathippakam, Chennai, India.

Sittampalam, S.K., (1996) Jaffna University Publication, Jaffna, Sri Lanka

Thirunavukkarasu Swamikal (1998), Thevaram (4-6 thirumuraikal) Varthamaanan Pathippakam, Chennai, India.



**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License